முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – 2023 சனவரி

## (203) வணிகச் சட்டம்

(Business Law)

2023-02-25
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):
  (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
  *விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

  பக்கங்கள் : 07
  வினாக்கள் : 07

  (2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***
  (3) *வழங்கப்பட்டுள்ள **விடைப் புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த **மொழி மூலத்திலேயே விடைகள்** எழுதப்படல் வேண்டும்.*
  (4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  (5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்** அவற்றின் **வரைவிலக்கணங்களுடன்** இணைக்கப் பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லை** கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (6) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.6** வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக..*

**1.1** கீழ்வருவனவற்றில் எந்தச் சட்டம் இலங்கையில் மீள்நிரப்புச் (residuary) சட்டமாகச் செயற்படுகிறது?

(1) கண்டியச் சட்டம் (2) ரோமன் - டச்சுச் சட்டம்
(3) ஆங்கிலச் சட்டம் (4) முஸ்லிம் சட்டம்

**1.2** கீழ்வருவனவற்றில் எது மேல் நீதிமன்றத்தின் (High court) ஒரு **<u>அதிகாரமன்று</u>**?

(1) அடிப்படை நியாயாதிக்கம். (2) மேன்முறையீட்டு நியாயாதிக்கம்.
(3) சாசன வழக்குகள். (4) மத்தியஸ்த வழக்குகள்.

**1.3** கீழ்வருவனவற்றில் கைமாற்றத்தகு சாதனமொன்றின் ஒரு பண்பாக (characteristic) **அமையாதது** எது?

(1) வைத்திருப்பவர் அதன் மீது அவரது சொந்தப் பெயரில் வழக்குத் தொடரலாம்.

(2) வழங்குபவரின் உரித்து குறைபாடுடையதாக இருக்கும்போது, பெறுபவர் குறைபாடுடைய உரித்தொன்றைப் பெற்றுக்கொள்கிறார்.

(3) சாதனத்தின் உரித்தானது ஒப்படைத்தல் அல்லது புறக்குறிப்பிடல் மூலம் பரிமாற்றப்படலாம்.

(4) ஒரு சாதனத்தைப் பரிமாற்றம் செய்வது தொடர்பில் பணம் செலுத்தப் பொறுப்புடைய நபருக்கு அறிவித்தல் வழங்கத் தேவையில்லை.

**1.4** கீழ்வருவனவற்றுள் CIF உடன்படிக்கையொன்றில் விற்பனையாளரால் கொள்வனவாளருக்கு வழங்க வேண்டிய ஆவணம் எது?

(1) காப்புறுதிச் சான்றிதழ். (2) வார்நாமம்.

(3) விலைப்பட்டியல். (4) மேற்கூறிய யாவும்.

**1.5** கீழ்வரும் புறக்குறிப்பைக் கவனத்திற் கொள்க :

> ரொனி பெர்னான்டோவுக்கு
> மாத்திரம் செலுத்துக.
>
> ச. சீதாதேவி

மேலே சித்தரிக்கப்பட்டுள்ள புறக்குறிப்பு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) விசேட புறக்குறிப்பு. (2) மட்டுப்படுத்தப்பட்ட புறக்குறிப்பு.

(3) வெற்றுப் புறக்குறிப்பு. (4) நிபந்தனையுடனான புறக்குறிப்பு.

**1.6** பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின்படி, பொருளின் மாதிரியைக் காட்டி பொருள்கள் விற்பனை செய்யப்படும்போது;

**(a)** மொத்தப் பொருள்களையும் மாதிரியுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான நியாயமானளவு வாய்ப்பினை கொள்வனவாளர் கொண்டிருக்க வேண்டும்.

**(b)** மொத்தப் பொருள்களும் மாதிரியில் இருந்ததைத் தவிர வேறு எந்த குறைபாடும் அற்றதாக இருத்தல் வேண்டும்.

**(c)** மொத்தப் பொருள்களும் பொதுவாக மாதிரியுடன் ஒத்திருத்தல் வேண்டும்.

மேலுள்ளவற்றில், பொருள்கள் மாதிரியுடன் ஒத்திருத்தல் வேண்டும் என்பதற்கான உள்ளார்ந்த நிபந்தனையின்படி, சரியான கூற்றுக்களாவன :

(1) **(a)** யும் **(b)** யும் மாத்திரம். (2) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்.

(3) **(b)** யும் **(c)** யும் மாத்திரம். (4) மேற்கூறிய யாவும்.

(02 புள்ளிகள் வீதம், 12 புள்ளிகள்)

*இல. **1.7** தொடக்கம் **1.9** வரையான பின்வரும் ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** என்பதைக் குறிப்பிடுக. தெரிவு செய்யப்பட்ட விடையை (சரியானது / தவறானது) உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.7** அலகு நம்பிக்கை (unit trust) ஒன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவரின் நடவடிக்கைகள் தொடர்பில் விசாரணை செய்து, புலனாய்வுகளை மேற்கொள்வது பிணையங்கள் மற்றும் பரிமாற்ற ஆணைக்குழுவின் தொழிற்பாடுகளில் ஒன்றாகும்.

**1.8** ஏற்றுமதியாளருக்கு உறுதியான ஆவணங்கள் கிடைத்தவுடன் பணம் செலுத்துவதை ஏற்றுக் கொள்ளும் ஒரு நிபந்தனையாக நாணயக் கடிதங்கள் இனங்காணப்படலாம்.

**1.9** காசோலையைப் பொறுத்தமட்டில், "வரையுநர் (drawer)" என்பது காசோலை வரைந்தவரின் வங்கியாகும்.

(01 புள்ளி வீதம், 03 புள்ளிகள்)

*இல. **1.10** தொடக்கம் **1.14** வரையான வினாக்களுக்கான குறுகிய விடைகளை, உங்களுடைய விடைப் புத்தகத்தில் உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதவும்.*

**1.10** பணச் சலவையில் (Money laundering) சம்மதப் பாதுகாப்பு (consent defence) என்பதால் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விபரிக்குக.

**1.11** வார்நாமத்தின் (Bill of Lading) இரண்டு (02) முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.

**1.12** காசோலையொன்றின் இரண்டு (02) குறுக்குக் கோடிடல் வகைகளைக் குறிப்பிடுக.

**1.13** பொருள்கள் விற்பனை கட்டளைச் சட்டத்தின் கீழ் கொள்வனவாளர் ஒருவருக்குக் கிடைக்கக்கூடிய இரண்டு (02) பரிகாரங்களைக் (remedies) குறிப்பிடுக.

**1.14** 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ், பதிவு செய்யப்பட வேண்டிய இரண்டு (02) வகையான கம்பனிகளைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

(புள்ளிகள் 25 புள்ளிகள்)

---

*பகுதி A முடிவு*

---

## <u>பகுதி B</u>

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 02

**நிமல்** என்பவர் உடன்பட்ட விலையை 60 மாதாந்தத் தவணைகளில் செலுத்துவதற்கான வாடகை கொள்வனவு உடன்படிக்கையின் கீழ், 2022 சனவரியில் **ஸ்ரீ-லக் என்டபிரைசஸ்** இடமிருந்து மோட்டார் கார் ஒன்றை கொள்வனவு செய்துள்ளார். 2022 செப்ரெம்பரில், கார் விபத்தொன்றில் சிக்கியதால் **நிமல்** வேலைக்குச் செல்வதற்கு மாற்று போக்குவரத்து வசதியைப் பயன்படுத்தியிருந்தார். இதனால், இணங்கிக் கொண்டதன்படி, 6 மாதங்களுக்கான தவணைக் கட்டணங்களை **நிமல்** செலுத்தவில்லை. **ஸ்ரீ-லக் என்டபிரைசஸ்** மோட்டார் காரின் உரிமையை மீட்பதற்கு ஆர்வமாக உள்ளதுடன் காரைத் திரும்பவும் நிறுவனத்திற்கே எடுத்து வருவதற்கு இரண்டு பேரை பணிக்கமர்த்தியுள்ளது. அதே வேளை, மோட்டார் வாகனங்களின் விற்பனை விலைகள் கடுமையாக உயர்ந்துள்ளதால், மூன்றாம் நபர் ஒருவருக்கு அந்த மோட்டார் காரை விற்பனை செய்வதற்கு **நிமல்** முயற்சிக்கிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) இந்த விடயம் தொடர்பில் **நிமலுக்கு** இருக்கின்ற சட்ட உரிமைகள் மற்றும் கடமைகளை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(b) **ஸ்ரீ-லக் என்டபிரைசஸ்** இன் சட்ட உரிமைகள் மற்றும் கடப்பாடுகளை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

முகவராண்மைச் சட்டமானது உள்ளார்ந்த வழிமுறைகளால் உருவாகும் முகவராண்மையின் பல்வேறு வடிவங்களையும் ஏற்பிசைவு செய்கிறது. முதல்வர் மற்றும் முகவருக்கிடையேயான முகவராண்மையொன்று உருவாகும் ஒரு வழிமுறையாக வலுவளிப்பு (ratification) காணப்படுகிறது. வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு வெளியே முகவர் ஒருவர் செயற்படும்போது, முதல்வர் அவரது முகவரால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு பொறுப்புடையவராக இருக்க மாட்டார். எவ்வாறாயினும், முதல்வர் அத்தகைய நடவடிக்கையை வலுவளிப்புச் செய்ய முடியும் என்பதுடன் வலுவளிப்பு வழிமுறையின் மூலம் சட்ட அதிகாரத்தையும் வழங்க முடியும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான ஒவ்வொரு உதாரணத்துடன், வலுவளிப்பை ஆளுகை செய்கின்ற இரண்டு (02) தொடர்புடைய விதிகளை **விபரிக்குக.**

(06 புள்ளிகள்)

(b) அவசியத்தன்மையால் உருவாகும் முகவராண்மைக்காக நிறைவேற்றப்பட வேண்டிய முன்தேவைப் பாடுகள் (pre-requisites) நான்கினைக் (04) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

**அஸார்** மற்றும் **அமீர்** ஆகியோர் துடுப்பாட்ட வீரர்களுக்கான விளையாட்டு உபகரணங்களை விற்பனை செய்யும் நோக்குடன் **A&A** என்ற பங்குடமை வியாபாரமொன்றை ஆரம்பித்தனர். அடிப்படையில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் துடுப்பாட்ட உபகரணங்களை விற்பனை செய்யும் தமது வியாபாரத்தை அபிவிருத்தி செய்வதற்காக அவர்கள் இருவரும் இணைந்து பணியாற்றுகின்றனர். எவ்வாறாயினும், **அமீர்** இந்தியாவிலுள்ள **வரையறுக்கப்பட்ட பற்-மேன் கம்பனியிடமிருந்து** கழிவு (தள்ளுபடி) விலையில் துடுப்பாட்ட மட்டைகளைக் கொள்வனவு செய்திருந்த போதிலும், அவற்றைக் கொள்வனவு செய்த விலையை விட 40% அதிகமாகவுள்ள தற்போதைய சந்தை விலையில் **A&A** பங்குடமை வியாபாரத்திற்கு விற்பனை செய்திருப்பதை **அஸார்** கண்டுபிடித்துள்ளார். இந்தப் பரிவர்த்தனையின் மூலம் **அமீர்** ஒரு இரகசிய இலாபத்தை ஈட்டியுள்ளதுடன் அதனை **அஸாருடன்** பகிர்ந்து கொள்ளவில்லை.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) இந்த விடயம் தொடர்பில் **அஸாருக்கு** உள்ள சட்ட உரிமைகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) ஒரு பங்காளர் என்ற வகையில் **அமீர்** மீறியுள்ள கடமைகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) பங்குடமையைக் கலைப்பதற்கு நீதிமன்றம் ஆணையிடக்கூடிய இரண்டு (02) சந்தர்ப்பங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

நுகர்வோர் எந்த விதத்தில் தமது கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டாலும் அவர்களைப் பாதுகாப்பதற்கு பல்வேறு ஒழுங்குவிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளால் இலங்கை நுகர்வோர் பாதுகாக்கப்படுகின்றனர். 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கணினிக் குற்றங்கள் சட்டம்கூட இலங்கையில் செயற்பாட்டிலுள்ள ஒரு முக்கியமான சட்டமாகும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் இரண்டு (02) நோக்கங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) கணினிக் குற்றங்கள் சட்டத்தின் நோக்கத்தை **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(c) கணினிக் குற்றங்கள் சட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படும் மூன்று (03) குற்றங்களைக் (offences) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**தர்ஷி** என்பவர் **யசோ** என்பவரிடமிருந்து 1,000 kg சீனியை திங்கட்கிழமை வாங்கியுள்ளார். **யசோ** அவற்றை விநியோகிப்பதற்குத் தயாரானபோது, அந்தச் சீனியை தான் வந்து தன்னுடைய களஞ்சிய சாலைக்கு எடுத்துச்செல்லும் வரை **யசோ**வின் களஞ்சியசாலையில் வைத்திருக்குமாறு **தர்ஷி** கோரிக்கை விடுத்திருந்தார். செவ்வாய்க்கிழமை இரவு **யசோ**வின் களஞ்சியசாலை அமைந்துள்ள பகுதியில் கடும் புயல் வீசியதால் அவருடைய களஞ்சியசாலை வெள்ளத்தில் மூழ்கியது. இதன் காரணமாக சீனி இருப்பு சேதமடைந்தது. இதனால் **தர்ஷி** சீனியை எடுத்துச்செல்ல மறுத்ததுடன் தனது பணத்தை மீளளிக்குமாறும் கோரியுள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) பொருள்கள் விற்பனை கட்டளைச் சட்டத்தின் கீழ், **தர்ஷி** மற்றும் **யசோ** ஆகியோரின் சட்ட உரிமைகளை **ஆராய்க.** (06 புள்ளிகள்)

(b) விலை செலுத்தாத விற்பனையாளர் (unpaid seller) ஒருவர் பொருள்களை மீள் விற்பனை செய்வதை அனுமதிக்கின்ற இரண்டு (02) சந்தர்ப்பங்களை **விபரிக்குக..** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 07

(A) கொழும்பில் வசிக்கின்ற அண்மையில் ஓய்வுபெற்ற வழக்கறிஞரான **திரு. ஜினிகரன்** மொணராகலை இலுள்ள பின்தங்கிய பகுதியொன்றிற்கு குடிபெயரத் தீர்மானித்தார். **திரு. ஜினிகரன்** 2023 ஆம் ஆண்டின் இறுதியில் இந்தப் புதிய இடத்திற்குச் செல்லவுள்ளார். அதனால், அவருக்கு 5 ஆண்டுகள் பழமையான அவரது பென்ஸ் கார் இனி தேவைப்படாது. 2022 டிசெம்பர் 11 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை, நீதிமன்ற வளாகத்திலுள்ள விளம்பரப் பலகையில் விளம்பரமொன்றை இட்டிருந்தார்.

**விற்பனைக்கு**

Benz-1948 சிறந்த நிலையிலுள்ளது.

ரூபா 3 மில்லியனுக்கு அதனை வாங்க விரும்புவதாக கீழ்வரும் முகவரிக்குக் கடிதம் அனுப்பும் முதலாவது நபருக்கு விற்பனை செய்யப்படும் :

666, புதுக்கடை, கொழும்பு -12.

12 ஆந் திகதி திங்கட்கிழமை காலையில், **திரு. ஜினிகரன்** புதிதாகத் தகைமைபெற்ற வழக்கறிஞரான **திருமதி. கல்பனாவைத்** தொடர்புகொண்டு, விளம்பரத்தில் உள்ள அதே விபரங்களுடன் தனது காரை அவருக்கு வழங்குவதற்கான விருப்பத்தைத் தெரிவித்தார். அதே நாள், **திரு. ஜினிகரனின்** காரை எதிர்வரும் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை காலையில் வாங்குவதற்குத் தான் விரும்புவதாகக் குறிப்பிட்டு **திருமதி. கல்பனா** கடிதம் ஒன்றை **ஜினிகரனுக்கு** அனுப்பியிருந்தார். இந்தக் கடிதம் கொழும்பு 12 இலுள்ள உரிய விலாசத்திற்கு 14 ஆந் திகதி புதன்கிழமை கிடைத்திருந்தது.

12 ஆந் திகதி திங்கட்கிழமை காலையில், **திரு. ஜினிகரனின்** கீழ்நிலை (junior) வழக்கறிஞரான **திருமதி. பொடிமெனிகே** விளம்பரப் பலகையில் இருந்த அந்த விளம்பரத்தைக் கண்டு, அந்தக் காருக்கான ரூபா 3 மில்லியனைச் செலுத்தத் தயாராக உள்ளதாகத் தெரிவித்து அதே நாளில் **திரு. ஜினிகரனுக்கு** அஞ்சல் அட்டையொன்றை தபாலில் இட்டிருந்தார். **திரு. ஜினிகரனுக்கு** அந்த அஞ்சல் அட்டை 13 ஆந் திகதி கிடைத்திருந்தது.

13 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகலில் **திரு. ஜினிகரன் திரு. வில்பிரைட்** என்பவருடன் இரவு உணவை எடுப்பதற்காக சென்றிருந்தார். அவர்கள் இருவரும் இரவு உணவைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, **திரு. ஜினிகரன்** அந்தக் காரை **திரு. வில்பிரைட்** இற்கு ரூபா 2.5 மில்லியனுக்கு விற்பனை செய்வதாக வாக்குறுதி அளித்திருந்தார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **திருமதி. கல்பனாவுக்கும் திரு. ஜினிகரனுக்கும்** இடையே வலிதான (valid) ஒப்பந்தமொன்று காணப்படுகிறதா என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(b) **திருமதி. பொடிமெனிகேயிற்கும் திரு. ஜினிகரனுக்கும்** இடையே வலிதான ஒப்பந்தமொன்று காணப்படுகிறதா என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(c) **திரு. வில்பிரைட்டின்** சட்ட உரிமைகள் பற்றி **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(B) ஒரு பெண் எந்திரப் பொறியியலாளரான **சுரக்ஷா** என்பவர் **வரையறுக்கப்பட்ட சுவர் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு** வாடிக்கையாளர்களால் செய்யப்படுகின்ற மோட்டார் வாகனக் காப்புறுதிக் கோரிக்கைகளுடன் தொடர்புடைய பரிசீலனைகள், மதிப்பீடுகள் மற்றும் புலனாய்வுகளை முன்னெடுப்பதற்குத் தேவையானவற்றைக் கண்டறிகின்ற தொழில்சார் மோட்டார் வாகன மதிப்பீட்டாளராக **வரையறுக்கப்பட்ட சுவர் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில்** இணைந்துள்ளார். **சுரக்ஷா** 2020 யூன் 01 ஆந் திகதி **வரையறுக்கப்பட்ட சுவர் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில்** இணைந்திருந்தார். தரப்பினரிடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு இணங்க, **சுரக்ஷா, வரையறுக்கப்பட்ட சுவர் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின்** நலனுக்காகப் பணியாற்றக் கட்டுப் பட்டுள்ளார். அவர் அவ்வாறு செய்யத் தவறுவாராயின், கம்பனியானது தொழிலை முடிவுறுத்து வதற்கான அதிகாரத்தைக் கொண்டிருக்கிறது. **சுரக்ஷா** ஒவ்வொரு நாளும் காலை 9.30 மணிக்கு முன்னர் அலுவலகத்திற்கு வருகை தருதல் வேண்டும். **வரையறுக்கப்பட்ட சுவர் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்** மதிப்பீட்டாளருக்குத் தேவையான சகல உபகரணங்களையும் வழங்குவதுடன் மதிப்பீட்டுடன் தொடர்புடைய போக்குவரத்து மற்றும் பிற செலவினங்களையும் மீளளிப்புச் செய்கிறது.

இரண்டு ஆண்டுகளின் பின்னர், 2022 யூன் 18 ஆந் திகதி **வரையறுக்கப்பட்ட சுவர் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், சுரக்ஷா**வின் சேவையை முடிவுறுத்தியிருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் **சுரக்ஷா,** தான் கம்பனியின் ஓர் ஊழியர் என வாதிட்டார். எவ்வாறாயினும், அவர் ஒரு சுயாதீன ஒப்பந்ததாரர் என கம்பனி கூறியது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) பொருத்தமான சோதனைகளைத் தொடர்புபடுத்தி, ஓர் ஊழியருக்கும் ஒரு சுயாதீன ஒப்பந்ததாரருக்கும் இடையிலான வேறுபாட்டை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(b) **சுரக்ஷா,** தான் ஓர் ஊழியர் என்ற ரீதியில் **வரையறுக்கப்பட்ட சுவர் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடம்** தனது பதவியைக் கோர முடியுமா என்பதை **ஆராய்க.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |